**தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குகுழு - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை

எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிநிலைமைக் கூற்று தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் சரியாக தயாரிப்பதற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காத்தில் இந்தக் கணக்கீட்டு வழுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் சரியான ஒழுங்கு முறையில் உள்ளக்குதல் வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவினால் அருகிச் செல்லும் மீதி முறையில் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் அது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 86 (ஆ) பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இந்தக் கணக்கீட்டு வழுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 86 (ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 10,362,333 ஆன மூலதன மானியம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 (திருத்தப்பட்ட) இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுக்கப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் வெளியிடப்பட்ட மூலதனமாக காண்பிக்கப்பட்ட மையால் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற நிறுத்தி வைத்தல் உழைப்பு மீதி அப் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைகள் எதிர்வரும் ஆண்டுமுதல் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெறுமதியால் குறைத்தும் வெளியிடப்பட்ட மூலன மீதி அப்பெறுமதியால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எதிர்வரும் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 82,996 ஆன கணனி மற்றும் அச்சிடல் இயந்திரங்களின் சேவை கட்டணச் செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் அதிகரித்தும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டிற்கான செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக அறிக்கையிடப்பட்டமை எதிர்காலத்தில் மேற்கொள்ளாதிருப்பதற்கு கவனத்திற் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்வரும் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய இலக்கம் 09/2009 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை | உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தரல் வெளிச் செல்லலைப் பதிவிடுவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தற்போது பயன்படுத்தப்படுகின்ற இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரமொன்று உரிய நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுட ன் எதிர்வரும் ஆண்டிற்காக சேவை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஒக்டோபர் 07 ஆந் திகதிய இலக்கம் 21/2013 | விடுமுறை தினங்களில் சேவையாற்றும் போது திணைக்களத் | எதிர்காலத்தில் இந்த விடயங்களை சரிசெய்வ தற்கு | அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்ற அரச நிருவாக சுற்றறிக்கை | தலைவரின் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒரு கலண்டர் மாதத்தில் இரண்டு நாட்களுக்கு மேற்படாத நாட்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவையேற்படுமாயின் உரிய அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கூட்டு மொத்தமாக 39,879 விடுமுறை தின படி செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட் டுள்ளது. உத்தியோகத்தர்களின் அதிக பற்றாக்குறையின் காரணமாக தற்போது பதவியணியினரைச் சேவையில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள் தமது மேலதிக கடமைகளுக்காகவும் ஈடுபடுத்த வேண்டிய ஏற்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சற்றறிக்கை. | ஆணைக்குழுவினால் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வின் பின்னர் எங்களால் 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட் டுள்ளதுடன் தற்போது அந்த ஆவணங்கள் தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற அரச பொது முயற்சிகளுக்கான நிறுவன நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் - 4.4 ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுட ன் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் இதுவரை உள்ளக கணக்காய்வு ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவி ல்லை. | ஒட்டுமொத்த பதவியணியினரை திருத்தித் தருமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரப் பட்டிருந்ததுடன் அந்த முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்றை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் திணைக்களத்தல் விநியோகிக்கப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் கண்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குகள் (05 மாதங்கள்) நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வு அறிக்கையை உள்ளடக்கி வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும் இந்த அறிக்கை திகதி வரையில் ஆணைக்குழுவினால் 2023 ஆம் ஆண்டிற்குரிய வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்தது டன் ஆணைக் குழுவினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை தமிழ் மொழிபெயர்ப்பிற்காக தாமதம் ஏற்பட்டதன் காரணமாக அது இதுவரை அச்சிடப்படாதிருந்தது டன் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக வெகுசன ஊடக துறை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு 2023 ஆம் ஆண்டிற்குரிய வரைவு வருடாந்த அறிக்கை தயாரிக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய படிவங்களின் பிரகாரம் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,815,984 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,912,855 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகள் ரூபா 96,871 பற்றாக்குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இதற்காக மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடு கிடைத்தமை 23 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையும், செலவினங்கள் பதிவழிக்கப்பட்டமையும் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த ஆண்டில் ரூபா 51,500 தொகை கொள்வனவு செய்யப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரத்தை வருடாந்த சேவையிடல் தொடர்பான ஆணைக்குழு மற்றும் உரிய கம்பனிக்கிடையே உடன் படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. அவ்வாறே இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச் செல்கை நேரங்கள் குறிப்பிட்டு அறிக்கை பெறப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2024 ஏப்ரல் 10 வரையிலும் இந்த இயந்திரம் செயலிழந்து காணப்பட்டது. | தற்போது உரிய இயந்திரத்தின் குறைபாடுகளைச் சரிசெய்யுமாறு இயந்திரம் வழங்கிய நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டிற்கான சேவை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கும் அந்த நிறுவனத்திலிருந்து விசாரணை செய்யப்பட்டுள்ளது. | உரிய கம்பனியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டி இருந்ததுடன் இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச் செல்கை குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) ஆணைக்குழுவின் செயலாற்றலை பரீட்சிப்பதற்காக 2023 திசம்பர் 11 ஆந் கோரப்பட்ட 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு விசாணை செய்வதற்கு காணப்படுகின்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் காலப் பகுப்பாய்வு தகவல்கள் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்குரிய மேன்முறையீடுகளின் சுருக்கமான அறிக்கை யொன்று மேன்முறையீட்டுப் பிரிவினால் தற்போது தயாரிக்கப்படுகின்றது. | மேன்முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் காலப் பகுப்பாய்வு தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் சனாதிபதி அவர்களினால் தலைவரை உள்ளடக்கிய 05 | இந்த ஆணைக்குழுவில் அங்கீகரிப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 26 ஆக இருந்த போதும் தற்போது | அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அங்கத்தவர்கள் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படுகின்றனர். 2016 இன் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பணிப்பாளர் நாயகமாக இருந்ததுடன் ஆணைக்குழுவின் வேலை நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக தேவையான தீர்மானங்களை எடுக்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கின்றவர்களின் எண்ணிக்கை ஒன்றும் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அதன் பிகாரம் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ஆணைக்குழுவில் அங்கீகரித்த மொத்த ஊழியர் எண்ணிக்கை 26 ஆக இருந்த போதும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 10 ஆனமையால் வெற்றிடங்கள் 16 ஆகக் காணப்பட்டது. | சேவையில் இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்ததுடன் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ள்பபடும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகப் பதவிக்காக ஆரம்பத்திலிருந்து நிரந்தர உத்தியோகத்தர் நியமிக்கப்பாதிருந்ததுடன் அந்தப் பதவி ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதிற் கடமை அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி, சட்ட உத்தியோகத்தர் பதவி, சட்ட உதவியாளர் என்பற்றில் 04 வெற்றிடங்கள் காணப்பட்டமை ஆணைக்குழுவின் செயலாற்றல் தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் போது | ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகப் பதவிக்காக 2016 இன் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு முடியுமாக இருந்ததுடன் அதன் பிரகாரம் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டிருந்தார். வெற்றிடமாகக் காணப்பட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக அமைச்சரவை | அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| புறந்தள்ள முடியாதிருந்தது. | அங்கீகாரத்தின் பிரகாரம் ஊழியர்கள் நியமிக்கப்பட்டதுடன் வெற்றிடமாகக் காணப்படுகின்ற சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. |